**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 19.10.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

**மன்றப் பொருள் 01 :**

15வது நிதிக்குழு Tied Grand 2021–2022–ன் கீழ் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 14.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சி உயர்மட்ட நீர்த்தேக்க நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மற்றும் OHT வளாகத்தில் (315 sqm) பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 10.00 | 1)திரு.D.ஆபேல் ஜெயசீலன் – மதிப்பீட்டை விட 0.06% குறைவு<br>2) திரு.S.பரமசிவன் மதிப்பீட்டை விட 0.13% அதிகம் |
| 2 | கேசி ரோடு அம்மா உணவகம் OHT மற்றும் Sasaivothama Head works–ல் Liquid chlorine Plant அமைத்தல் | 6.00 | 1) Excellent Chloro System மதிப்பீட்டை விட 0.1% குறைவு<br>2) Sri Sathya ties & Chemicals மதிப்பீட்டை விட 1.92% அதிகம் |

அலுவலக குறிப்பு :

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1–ற்கான பணிக்கு மதிப்பீட்டை விட 0.06% குறைவாகவும், வ.எண் 2–ற்கான பணிக்கு மதிப்பீட்டை விட 0.1% குறைவான விகிதத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 147 ; அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 02 :**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022–ன் கீழ் செங்கோட்டைநகராட்சிக்குட்பட்ட காலாங்கரை மயானத்தில் ரூ.145.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது நவீன எரிவாயு தகன மேடையின் கட்டிடப் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. நவீன எரிவாயு தகன மேடையினை செயல்பாட்டிற்கு கொண்டு வர மாசுக்கட்டுபாட்டு வாரியத்தின் தடையில்லா சான்று CTE (Consent to Establish) மற்றும் CTO (Consent to Operate) பெற வேண்டியுள்ளது. மேற்படி சான்று பெற ரூ.28400/– தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்தவும், அதற்கான தொகையினை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்திட நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 148 ; மன்ற அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 03 :</u>**

செங்கோட்டைநகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் கசடு கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையத்தில் 2022-2023-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணி ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 30.9.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.D.ஆபேல் ஜெயசீலன் | மதிப்பீட்டை விட 2.08% அதிகம் |
| 2. | திரு.S.பரமசிவன் | மதிப்பீட்டை விட 0.11% குறைவு |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:2. திரு.S.பரமசிவன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 149 ; மன்றம் பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 04 :</u>**

இந்திய திருநாட்டின் 75வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவையொட்டி 13-08-2022 முதல் 15-08-2022 வரை அனைத்து வீடுகளிலும் இந்திய தேசியக் கொடியினை ஏற்றி வைத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டதன் படி, இந்நகராட்சிக்கு ஒரு தேசியக் கொடி ரூ.21/- வீதம் 10,000 எண்ணம் தேசியக் கொடிகள் பெறப்பட்டது. தேசியக் கொடிகள் அனைத்தும் விற்பனை செய்து பெறப்பட்ட மொத்த தொகைகள் ரூ.2,10,000/- இந்நகராட்சி கருவூலத்தில் தொகை செலுத்தப்பட்டு விட்டது. மேற்காணும் தொகையினை தேசியக் கொடிகள் வழங்கிய ரம்யா டெக்ஸ்டைல்ஸ், இராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண் 150 ; மன்றம் பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 05 :</u>**

O&M Gap Filling Interest Fund 2021–2022–ன் கீழ் இந்நகராட்சி சமுதாய கழிப்பறைகள் 2 எண்ணங்கள் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டிலும், பொது கழிப்பறைகள் 4 எண்ணங்கள் ரூ.1.30 லட்சம் மதிப்பீட்டிலும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்:19089/2021/E3, நாள்:19.11.2021–ன்படி அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு அரசு மானியம் ரூ.855560/– மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.74440/– செலவிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிதி ஒதுக்கீடு அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நகராட்சி பங்குத்தொகை ரூ.74440/– வருவாய் நிதியில் செலவிட மன்ற அனுமதி கோரப்பட்டதில் நகர்மன்ற தீர்மான எண்:92, நாள்:20.06.2022 தீர்மானத்தில் இம்மன்றம் மூலம் குழுக்கள் அமைத்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த பின்னர் மன்ற ஒப்புதல் பெற்று நிர்வாக பங்குத்தொகை செலுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது. அதன்படி மன்றம் மூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் பணி நல்ல நிலையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி பங்குத்தொகை ரூ.74440/–ஐ வருவாய் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ரூ.74440/– வருவாய் நிதியில் செலவிடப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 151 ; அலுவலக குறிப்பு ஏற்று மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 06 :</u>**

நகர்மன்றத் தலைவர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம் :

1. செங்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டி அலுவலகப் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி
2. செங்கோட்டை நகராட்சி டவுண் ஹால் ரோட்டில் உள்ள காமராஜர் மண்டப இடத்தில் புதிதாக சமுதாய நலக் கூடம் கட்டி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி.
3. செங்கோட்டை நகர பேருந்து நிலையத்தினை தென்காசி மாவட்டத்தின் முன்மாதிரியான பேருந்து நிலையமாக மாற்றம் செய்திடவும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி.

**<u>தீர்மானம் எண் 152 ; தலைவர் முன் மொழிந்த தீர்மானத்தினை துணைத் தலைவர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் ஒருமனதாக ஏற்று நிறைவேற்றப்பட்டது.</u>**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி